# சிறந்த திருநங்கை விருது

திருநங்கைகள் இச்சமூகத்தில் அவர்கள் சந்திக்கும் எதிர்ப்புகளை மீறி, தங்களுடைய சொந்த முயற்சியில் படித்து, தனித்திறமைகளை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறி சாதனை படைத்த திருநங்கையரை கௌரவிக்கும் வகையில், மற்ற திருநங்கையர்களை ஊக்குவிக்கும் வகையில் திருநங்கையர் தினம் என அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 15–ம் தேதியன்று ஒவ்வொரு ஆண்டும் திருநங்கையருக்கான முன்மாதிரி விருதானது ரூ.1,00,000/– காசோலை மற்றும் சான்று ஆகியவற்றுடன் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2026–ஆம் ஆண்டிற்கு திருநங்கைகளுக்கான முன்மாதிரி விருதானது, திருநங்கையர் தினமான ஏப்ரல் 15–ம் தேதி வழங்கப்பட உள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் உள்ளவாறு, 31.12.2025 முதல் 18.02.2026 வரை தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் awards.tn.gov.in தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## படிவம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | |
| பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| கல்வித் தகுதி | : | |
| இருப்பிட முகவரி | : | |
| பணிபுரியும் பதவியின் பெயர் | : | |
| பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் மற்றும் மாவட்டம் | : | |
| திருநங்கைகள் நல வாரியத்தின் உறுப்பினரா? | | |
| திருநங்கைகள் நல வாரியத்தின் அடையாள அட்டை எண் மற்றும் வருடம் | | |
| திருநங்கைகள் நலனிற்கு (5 திருநங்கைகள்) உதவிய விவரம் (புகைப்படத்துடன்) | : | |
| தன்னுடைய வாழ்க்கையினை எவ்வாறு சுயமாக அமைத்துக்கொண்டுள்ளார் என்கிற விவரம் | : | |
| ஒரு பக்கம் தனியரை பற்றிய விவரம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | : | |
| பெற்ற விருதுகளின் விவரம்?<br>(விருது பெற்றிருப்பின் அதன் விவரம் / விருதின் பெயர் / யாரிடமிருந்து பெற்றது மற்றும் பெற்ற வருடம்) | : | |
| சேவையாற்றியதற்கான விரிவான அறிக்கை (புகைப்படம் மற்றும் பத்திரிக்கை செய்தி தொகுப்பு) | : | |
| இருப்பிடத்தின் அருகில் உள்ள காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் இல்லை என்பதற்கான சான்று. | : | |

**FORMAT**

| | | |
|---|---|---|
| Name | : | |
| Date of Birth and Age | : | |
| Educational Qualification | : | |
| Residential Address | : | |
| Designation | : | |
| Name of the Company and District | : | |
| Are you a member of Transgender Welfare Board? | : | |
| ID Card No. and Year of the Transgender Welfare Board | : | |
| Details that helped transgender welfare (5 transgender) with photo. | : | |
| A description of how the transgender has set up his own life | : | |
| A Brief Description the transgender (one page) | : | |
| Details of Awards Received<br>(Name of the Award / Received from whom / Year) | : | |
| Detailed Report on transgender service (Photos and Paper News) | : | |
| Evidence that there were no criminal activities obtained from the nearby police station. | : | |

# செய்தி வெளியீடு

திருநங்கைகள் தினம் என அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 15–ம் தேதியன்று திருநங்கைள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து அவர்களுள் முன்மாதிரியாக திகழும் திருநங்கைகளை சிறப்பிக்கும் வகையில் 2026–ஆம் ஆண்டுக்கான "சிறந்த திருநங்கைக்கான விருது" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்விருது பெறும் சாதனையாளருக்கு ரூ.1,00,000/–க்கான (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

**தகுதிகள்:**

1. அரசாங்கத்தின் உதவி பெறமால் தனது வாழ்க்கையை கட்டமைத்துக்கொண்ட திருநங்கைகள்.
2. திருநங்கைள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து, குறைந்தப்பட்சம் 5 திருநங்கைகள் தங்களது வாழ்வாதார ஆதரவைப் பெறவும், கண்ணியமான வாழ்க்கையை நடத்தவும் உதவிபுரிந்த திருநங்கைகள்.
3. தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது.

மேற்படி, தகுதியான நபர்களின் விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையுடன் வரப் பெற வேண்டும். மாநில அளவிலான உயர் மட்டக்குழு விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய, விருதுக்கு தகுதியான விண்ணப்பத்தாரர் தங்களது கருத்துரு (விரிவான தன் விவர குறிப்பு, உரிய விவரங்கள் மற்றும் அதற்குரிய ஆவணங்கள்) அடங்கிய (Booklet 4) தமிழ் 2 மற்றும் ஆங்கிலத்தில் 2 புத்தக வடிவத்தில் தயாரிக்கப்பட்டு, பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். எனவே, அனைத்து மாவட்டங்களிலும் திருநங்கைள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து திருநங்கைகள், சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களை நேரில் அணுகி கருத்துருக்கள் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது. அல்லது https://awards.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக வருகின்ற 31.12.2025 முதல் 18.02.2026 வரை பதிவேற்றம் (Upload) செய்யப்பட்ட வேண்டும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள்

கண்டிப்பாக நிராகரிக்கப்படும். விருது பெறத்தகுதியுள்ளவர் இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வு குழுவால் தெரிவு செய்யப்படுவார்.

திருநங்கைகள் இச்சமூகத்தில் அவர்கள் சந்திக்கும் எதிர்ப்புகளை மீறி, தங்களுடைய சொந்த முயற்சியில் படித்து, தனித்திறமைகளை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறி சாதனை படைத்த திருநங்கையரை கௌரவிக்கும் வகையில், மற்ற திருநங்கையர்களை ஊக்குவிக்கும் வகையில் திருநங்கையர் தினம் என அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 15-ம் தேதியன்று ஒவ்வொரு ஆண்டும் திருநங்கையருக்கான முன்மாதிரி விருதானது ரூ.1,00,000/- காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2026-ஆம் ஆண்டுக்கான திருங்கைகளுக்கான முன்மாதிரி விருதானது, திருநங்கையர் தினமான ஏப்ரல் 15-ம் தேதி வழங்கப்பட உள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்களை தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (awards.tn.gov.in) பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களும் இணையதளம் வழியாக விண்ணப்பங்களை பெற்றிட ஏதுவாக, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாயிலாக நாளிதழ்களில் செய்தியாக வெளியிட்டு, அதன்படி 31.12.2025 முதல் 18.02.2026 வரை பெறப்படும் விண்ணப்பங்களை, பார்வை 2-ல் காணும் அரசாணையில் உள்ளவாறு, மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவின் மூலம் தகுதியான நபர்களை தேர்வு செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையுடன் 05.03.2026 தேதிக்குள் கீழ்க்காணும் விதிமுறைகளைப் பின்பற்றி, இத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தின்படி (2 நகல்களில்) இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி, திருநங்கையர் தின விருது வழங்கும் பொருட்டு கருத்துருக்களை அனுப்புவதற்கான விதிமுறைகள்**

- திருநங்கைகள் அரசு உதவி பெறாமல் தானாக சுயமாக வாழ்க்கையில் முன்னேறி இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 5 திருநங்கைகளுக்காவது அவர்கள் வாழ்க்கையில் முன்னேற உதவியிருக்க வேண்டும்.
- திருநங்கைகள் நல வாரியத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது.

**கையேட்டில் (Booklet) இணைக்கப்பட வேண்டியவை**

1. பொருளடக்கம் மற்றும் பக்க எண்.
2. உயிர் தரவு (Bio Data) மற்றும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ–2
3. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைக் கடிதம்
4. மாவட்ட சமூக நல அலுவலரின் பரிந்துரைக் கடிதம்
5. சுயசரிதை
6. தனியரைப் பற்றிய விவரம் (ஒரு பக்க அளவில்) – Soft & Hard copy
7. விருதுகளின் விவரம் (விருது பெற்றிருப்பின் அதன் விவரம் / விருதின் பெயர் / யாரிடமிருந்து பெற்றது மற்றும் பெற்ற வருடம்)
8. சேவை பற்றிய செயல்முறை விளக்கம் (புகைப்படத்துடன்)
9. சேவையைப் பாராட்டி பத்திரிக்கை செய்தித் தொகுப்பு
10. சேவையாற்றியதற்கான விரிவான அறிக்கை
11. சமூக சேவையாளரின் / சமூக சேவை நிறுவனத்தின் சேவை மூலமாக பயனாளிகள் பயனடைந்த விவரம்
12. சமூகப் பணியாளர் இருப்பிடத்தின் அருகில் உள்ள காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் இல்லை என்பதற்கான சான்று.
13. இணைப்பு படிவம் தமிழில் (மருதம் எழுத்துருவில்) முழுமையாக பூர்த்தி செய்து Soft Copy & Hard Copy அனுப்பப்பட வேண்டும்.
14. கையேடு (Booklet) தமிழில் அச்சு (Print) செய்யப்பட்டு தலா 2 நகல்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி உரிய முறையில் இணையதளம் மூலமாகப் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பெறப்பட்ட விண்ணப்பங்களை மட்டுமே உரிய படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், வெற்றறிக்கை அனுப்புவதை கட்டாயம் தவிர்க்கவும், அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

## படிவம் – 1

### 2026–ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கையருக்கான விருது பெயர்ப்பட்டியல் விவரம்

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | நல வாரியத்தின் உறுப்பினரா ? | நல வாரியத்தின் அடையாள அட்டை வைத்திருப்பவரா? | திருநங்கைகளின் வாழ்க்கைக்கு (5 நபர்கள்) உதவிய விவரம் | ஏதேனும் விருது பெற்றிருப்பின் அதன் விவரம் | அரசின் உதவி இல்லாமல் தன் வாழ்க்கையை எவ்வாறு சுயமாக அமைத்துக் கொண்டுள்ளார் என்ற விவரம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | | | |